உதவி அமர்வு நீதிமன்றம் பொள்ளாச்சி
முன்னிலை: **திரு.M.மணிகண்டன், M.A., M.L., PG.D. C.F.SC.,**
சார்பு நீதிபதி பொள்ளாச்சி

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் நாள் புதன்கிழமை
(2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 04 ம் நாள்)

**<u>அமர்வு வழக்கு எண். 234/2023</u>**

| | | |
|---|---|---|
| திரு.ரெ.செந்தில்குமார், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், வால்பாறை அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. | | |
| காவல் நிலையம் மற்றும் வழக்குப்பதிவு | : | வால்பாறை காவல் நிலையம்,<br>குற்ற எண். 3/2019 |
| எதிரிகளின் பெயர், வயது, விலாசம் முதலியன | : | 1. சௌந்தரபாண்டியன் (55/2022)<br>த/பெ. பெரியபெருமாள் நாடார்<br>வாழைத்தோட்டம், வால்பாறை.<br>2. செந்தில்குமார் (50/2022)<br>த/பெ. சண்முகம்,<br>துளசிங்கா நகர், வால்பாறை.<br>3. அருண்குமார் (22/2022)<br>த/பெ. பாபு,<br>முருகாளி எஸ்டேட் 2 வது பிரிவு,<br>வால்பாறை. |
| குற்றச்சாட்டுகள்<br>குற்றச்சாட்டு | : | கண்ணாடிகளை அடித்து உடைத்து, தகாத வார்த்தைகளால் பேசி, கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக தமிழ்நாடு சொத்துக்கள் சேதம் அல்லது இழப்பு ஏற்படுத்துதல் தடுப்பு சட்டம் பிரிவு 3(1), இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(ii)ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம். |
| எதிரிகளின் வாதுரை | : | குற்றவாளிகள் இல்லை |
| நீதிமன்றத்தின் முடிவு | : | **முடிவாக,**<br><br>முடிவாக, இந்த வழக்கில் எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் |

| | | |
|---|---|---|
| | | தகுந்த சாட்சியங்கள், சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகள் தமிழ்நாடு சொத்துக்கள் சேதம் அல்லது இழப்பு ஏற்படுத்துதல் தடுப்பு சட்டம் பிரிவு 3(1), இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(ii)ன்கீழ் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து எதிரிகளை விடுதலை செய்து கு.வி.மு.ச. பிரிவு 235(1)ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| எதிரிகள் சிறையிலிருந்த காலம் | : | 2 ம் எதிரி 05.04.2018 முதல் 12.04.2018<br>3 ம் எதிரி 05.04.2018 முதல் 12.04.2018 |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 03.06.2018 |
| நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலிருந்து அமர்வு நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள் | : | 04.09.2023 |
| கு.வி.முச பிரிவுகள் 228, 240, 246 மற்றும் 251ன் கீழ் எதிரிகள் விசாரிக்கப்பட்ட நாள் | : | இல்லை |
| எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மற்றும் அதன் முடிவு | : | இல்லை |
| சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட தேதிகள் | : | 13.10.2025, 16.02.2026, 10.03.2026 |
| பிரிவு 313–ன் கீழ் எதிரிகள் விசாரணை செய்யப்பட்ட தேதி | : | 13.03.2026 |
| எதிரிகள் நீதிமன்றத்தில் | : | இல்லை |

| | | |
|---|---|---|
| முன்னிலையாகாமல் தலைமறைவாக இருந்திருப்பின் அதன் விபரம் | | |
| நீதிமன்றங்களில் தடை உத்தரவு ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டதா, தாக்கல் செய்யப்பட்டிருந்தால் அதன் முடிவு | : | இல்லை |

இந்த அமர்வு வழக்கு கோயமுத்தூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தின் கோப்பிலிருந்து இவ்வுதவி அமர்வு நீதிமன்றத்தின் கோப்பினுக்கு மாறுதல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் 04.09.2023 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு இறுதியாக 13.03.2026 ம் தேதி என் முன்பாக வரப்பட்டு, அரசுக்காக அரசு தரப்பு கூடுதல் குற்றத்துறை வழக்கறிஞர் திரு.S.தேவசேனாதிபதி அவர்களும், எதிரிகள் தரப்பில் அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.T.மருதராஜ், பி.ஏ., பி.எல்., அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களும் என்னால் கேட்கப்பட்டு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்து, இன்றுவரை என் பரிசீலனையிலிருந்து இந்நீதிமன்றத்தில் பின்வருமாறு வழங்கப்படும்.

## <u>தீர்ப்புரை</u>

1) இந்த அமர்வு வழக்கானது கோயமுத்தூர் மாவட்டம், வால்பாறை காவல் நிலைய இறுதி அறிக்கையின் பேரிலான வழக்காகும். கடந்த 05.04.2018 ம் தேதியன்று காலை 10.30 மணியளவில் 1ம் சாட்சி கடையை திறந்து கொண்டிருந்தபோது வால்பாறை காந்தி சிலை அருகில் திமுக கட்சியை சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தபோது எதிரிகள், 1ம் சாட்சி கடையை திறப்பதைப் பார்த்து எந்த கடையையும் திறக்கக்கூடாது, பாபு ஸ்டோர் கடையை மட்டும் ஏண்டா திறந்தான் அவன் கடையை அடித்து நொறுக்குங்கடா என்று 2ம் எதிரி, 3ம் எதிரியிடம் சொல்ல 2, 3 எதிரிகள், 1ம் சாட்சியின்

கடைக்கு முன்பாக வந்து கல்லை எடுத்து 1ம் சாட்சியின் கடையை உடைத்து ரூ.70,000/- மதிப்புள்ள சேதத்தினை ஏற்படுத்திய குற்றத்திற்காகவும், மேற்படி சம்பவத்தை பார்த்த 1ம் சாட்சி "ஏன் இப்படி என் கடை கண்ணாடியை உடைக்கிறீங்க" என்று சத்தம்போட எதிரிகள் மூவரும் 1ம் சாட்சியை பார்த்து "தாயோழி" என தகாத வார்த்தையால் பொது இடத்தில் திட்டிய குற்றத்திற்காகவும், "உன்னை கொல்லாமல் விடமாட்டேன்" என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காகவும் எதிரிகள் மீது தமிழ்நாடு சொத்துக்கள் சேதம் அல்லது இழப்பு ஏற்படுத்துதல் தடுப்பு சட்டம் பிரிவு 3(1), இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(ii)ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) வால்பாறை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.04/2022 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு கு.வி.மு.ச. பிரிவு 207ன் படி வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டு வழக்கானது அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கத்தக்க வழக்கு என்பதால் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் வழக்கை கோயமுத்தூர் முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி அவர்கள் இவ்வழக்கை விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்து உத்தரவிட்டுள்ளார். இவ்வழக்கு நீதிமன்றத்தில் 04.09.2023ம் தேதியில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்கப்பட்ட பின்னர் எதிரிகள் மீது புலன் கொண்டு விசாரிக்கத்தக்கதும், தண்டிக்கத்தக்கதுமான குற்றத்தில் ஈடுபட்டார் என்பதும் முதல் நோக்கில் தெரியவந்ததால் எதிரிகள் மீது தமிழ்நாடு சொத்துக்கள் சேதம் அல்லது இழப்பு ஏற்படுத்துதல் தடுப்பு சட்டம் பிரிவு 3(1), இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(ii)ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி கேட்டபோது எதிரிகள்

குற்றவாளிகள் இல்லை என்று மறுத்தனர். வழக்கில் விசாரணை வேண்டும் என்று கேட்டதால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டன.

3) அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிரான வழக்கினை நிரூபணம் செய்ய அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான ஆவணங்களும், சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ம் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சி, சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) **அரசு தரப்பு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களிலிருந்து தெரிய வருகின்ற அரசு தரப்பு வழக்கு பின்வருமாறு :**

4.1) அரசு தரப்பு வழக்கை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை பரிசீலனை செய்யும்போது கடந்த 05.04.2018 ம் தேதியன்று காலை 10.30 மணியளவில் அ.சா.1 கடையை திறந்து கொண்டிருந்தபோது வால்பாறை காந்தி சிலை அருகில் திமுக கட்சியை சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்தபோது எதிரிகள், அ.சா.1 கடையை திறப்பதைப் பார்த்து எந்த கடையையும் திறக்கக்கூடாது, பாபு ஸ்டோர் கடையை மட்டும் ஏண்டா திறந்தான் அவன் கடையை அடித்து நொறுக்குங்கடா என்று 2 ம் எதிரி, 3 ம் எதிரியிடம் சொல்ல 2, 3 எதிரிகள், அ.சா.1 ன் கடைக்கு முன்பாக வந்து கல்லை எடுத்து கடையை உடைத்து ரூ.70,000/– மதிப்புள்ள சேதத்தினை ஏற்படுத்திய குற்றத்திற்காகவும், மேற்படி சம்பவத்தை பார்த்த அ.சா.1 "ஏன் இப்படி என் கடை கண்ணாடியை உடைக்கிறீங்க" என்று சத்தம்போட எதிரிகள் மூவரும் அ.சா.1 ஐ பார்த்து "தாயோழி" என தகாத வார்த்தையால் பொது இடத்தில் திட்டிய குற்றத்திற்காகவும், "உன்னை கொல்லாமல் விடமாட்டேன்" என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காகவும் எதிரிகள் மீது தமிழ்நாடு சொத்துக்கள் சேதம் அல்லது இழப்பு ஏற்படுத்துதல் தடுப்பு சட்டம் பிரிவு 3(1), இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(ii)ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு

செய்யப்பட்டுள்ளது என்பது இந்த நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. பின்னிட்டு எதிரிகள் மீது தமிழ்நாடு சொத்துக்கள் சேதம் அல்லது இழப்பு ஏற்படுத்துதல் தடுப்பு சட்டம் பிரிவு 3(1), இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(ii)ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

4.2) இந்த வழக்கில் புகார்தாரரான லாலு அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் தான் வால்பாறையில் ஸ்டேசனரி கடை நடத்தி வருவதாகவும், 2018ம் வருடம் தேதி, மாதம் நினைவில்லை என்றும், காலை 11.00 மணியளவில் கூட்டமாக ரோட்டில் சென்று கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது தான் கடையின் ஷட்டரை தூக்கியபோது கல்பட்டு தனது கடையின் கண்ணாடி உடைந்து விட்டதாகவும், அந்த கல்லை யார் கடைமீது வீசி எறிந்தார்கள் என்ற விபரம் தனக்கு தெரியவில்லை என்றும், எதிரிகளை தனக்கு தெரியவில்லை என்றும், தான் நடந்த சம்பவத்தை பொறுத்து போலீசாரிடம் புகார் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

4.3) அ.சா.2 ஆக ஆண்டு ஜோசப் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் 2018ம் ஆண்டு தேதி, மாதம் நினைவில்லை என்றும், காலை சுமார் 11.00 மணியளவில் தனது கடையில் இருந்தபோது பக்கத்து கடையில் சத்தம் கேட்டது அது தனது அண்ணனின் கடை என்றும், தான் உள்ளே சென்று பார்த்ததாகவும், அப்போது அவரது கடையில் கண்ணாடி உடைந்து காணப்பட்டது என்றும், தனது அண்ணனின் கடையை யார் உடைத்தார்கள் என்பதை தான் பார்க்கவில்லை என்றும், எதிரிகளை தனக்கு யார் என தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

4.4) அ.சா.3 ஆக ஜேசுநாதன் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் சுமார் 8 வருடத்திற்கு முன்பு சம்பவத்தை தான் நேரடியாக

பார்க்கவில்லை என்றும், தனது பக்கத்து கடைக்கு சில நபர்கள் வந்து கதவை அடைக்க சொல்லி கற்களை எடுத்து வீசினார்கள் என்றும், கண்ணாடி உடைந்துவிட்டது என்று கேள்விபட்டதாகவும், சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களை பொறுத்து தனக்கு தெரியாது என்றும், சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், எதிரிகளை தனக்கு தெரியுமா என்றால் தெரியும் என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

4.5) அ.சா.4 ஆக ஜீயா உல் ஹக் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது வழக்கு சம்பவத்தை பொறுத்து தனக்கு தெரியுமா என்றால் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரித்தார்கள், சம்பவத்தை பொறுத்து தெரியாது என்று சொன்னதாகவும், பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கண்ட கையெழுத்து தன்னுடையதா என்றால் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

4.6) அ.சா.5 ஆக சண்முகம் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் வழக்கு சம்பவத்தை பொறுத்து தனக்கு எதுவும் தெரியாது என்றும், ஆனால் கேள்விபட்டதாகவும், கடையை அடைக்க சொன்னார்கள் என்றும், அடைக்காத காரணத்தினால் கற்களை எடுத்து கண்ணாடியை உடைத்ததாக கேள்விபட்டதாகவும், தன்னுடைய கடை சம்பவம் நடத்த இடத்திலிருந்து சுமார் 20 கடை தள்ளி உள்ளது என்றும், தான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்து தன்னுடையதா என்றால் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

4.7) அ.சா.6 ஆக ரமேஷ் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் தங்கள் கடைக்கு மேல் தளத்தில் உள்ள பாபு ஸ்டோர்ஸ் கண்ணாடியை யாரோ உடைத்துவிட்டார்கள் என

கேள்விப்பட்டதாகவும், யார் உடைத்தார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், சம்பவத்தை தான் நேரில் பார்க்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

4.8) அ.சா.7 ஆக புலன் விசாரணை மேற்கொண்ட அசோக்குமார் உதவி ஆய்வாளர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் தான் தற்போது காமநாயக்கன்பாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 05.04.2018ம் தேதியன்று நிலைய அலுவலில் இருந்தபோது காலை 11.30 மணிக்கு வால்பாறை மெயின்ரோடு பாபு ஸ்டோரை சேர்ந்த ஜோசப் மகன் லாலு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று வால்பாறை காவல் நிலைய குற்ற எண் 81/2017 சட்டப்பிரிவு 3 of TNPPDL Act and 294(b), 506(2) IPC படி அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்ததாகவும், பின்னர் முதல் தகவல் அறிக்கை அசலுடன் வாதியின் அசல் புகார் மனுவையும் இணைத்து வால்பாறை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் இதர நகல்களை உயரதிகாரிகளுக்கு அனுப்பி வழக்குக் கோப்பை காவல் ஆய்வாளர் திருமேனி வசம் ஒப்படைத்ததாகவும், வழக்குக் கோப்பை பெற்றுக்கொண்ட காவல் ஆய்வாளர் வாதி அடையாளம் காட்டிய சம்பவ இடத்தை அன்றைய தினமே 12.30 மணிக்கு சாட்சிகள் சண்முகம் மற்றும ஜியா ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு அ.சா.ஆ.3 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் 13.00 மணிக்கு உடைந்து கிடந்த கண்ணாடி துண்டுகளையும், சிறிய கருங்கல் ஒன்றையும் அ.சா.ஆ.5 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும், கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்தை வால்பாறை நீதிமன்றத்திற்கு அ.சா.ஆ.6 படிவம் 91 மூலம் அனுப்பி வைத்ததாகவும், பின்னர் சாட்சிகள் லாலு, ஆண்டு ஜோசப், ஜேசு நாதன், ரமேஷ், ஜியா, சண்முகம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் சம்பவம் நடந்தது உண்மை என தெரியவந்ததால் வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளான சௌந்தரபாண்டியன், செந்தில் குமார்,

அருண்குமார் ஆகியோரை தேடிச் சென்றபோது கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் 05.04.2018ம் தேதி 14.45 மணிக்கு ஸ்டேன்மோர் சந்திப்பு அருகே நின்று கொண்டிருந்த எதிரிகள் செந்தில் குமார் மற்றும் அருண்குமார் ஆகியோர்களை கைதிற்கான காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், 1ம் எதிரி உயர் நீதிமன்றத்தில் முன் ஜாமின் பெற்றிருந்ததாகவும், பின்னர் வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது தமிழ்நாடு சொத்துக்கள் சேதம் அல்லது இழப்பு ஏற்படுத்துதல் தடுப்பு சட்டம் பிரிவு 3(1), இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(ii)ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

4.9) இந்த வழக்கில் புகார்தாரரான அ.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் 2018ம் வருடம் தேதி, மாதம் நினைவில்லை என்றும், காலை 11.00 மணியளவில் கூட்டமாக ரோட்டில் சென்று கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது தான் கடையின் ஷட்டரை தூக்கியபோது கல்பட்டு தனது கடையின் கண்ணாடி உடைந்து விட்டதாகவும், அந்த கல்லை யார் கடைமீது வீசி எறிந்தார்கள் என்ற விபரம் தனக்கு தெரியவில்லை என்றும், எதிரிகளை தனக்கு தெரியவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சம்பவத்தை நேரடியாக கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் சம்பவத்தை பொறுத்து குறிப்பிட்டு எதிரிகள் தான் குற்றம் இழைத்துவிட்டார்கள் என்பதை பொறுத்து சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் பார்வை மகஜர், மாதிரி வரைபடம், ஒப்புதல் வாக்குமூலத்தில் கண்ட சாட்சிகளான அ.சா.5 மற்றும் அ.சா.6 சாட்களும் பிறழ்சாட்சிகளாகியுள்ளனர்.

4.10) இந்த வழக்கின் புகார்தாரர் சம்பவத்தை பொறுத்து தெளிவாக சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட கண்ணுற்ற சாட்சிகள் யாரும் எதிரிகள் தான் சம்பவத்தில் ஈடுபட்டார் என்பதைப் பொறுத்து தெளிவாக எடுத்துக்கூறி சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் சா.பொ.1 மற்றும்

சா.பொ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளது. இதனைப் பொறுத்து விசாரிக்கப்பட்ட அ.சா.7 தனது சாட்சியத்தில் எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், சம்பவ இடத்திலிருந்து கல் மற்றும் கண்ணாடி கைப்பற்றப்பட்டதாக கூறியுள்ளார். ஆனால் அதனைப் பொறுத்து அ.சா.1 மற்றும் இதர கண்ணுற்ற சாட்சிகள் தெளிவாகக் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. காவல்துறை சாட்சிகள் மற்றும் கல் மற்றும் கண்ணாடி கைப்பற்றியதை வைத்து மட்டும் எதிரிகள் தான் குற்றம் இழைத்துவிட்டார்கள் என்று கருத இயலாது.

4.11) மேலும் சம்பவத்தை நேரடியாக கண்ணுற்ற சாட்சிகளும், புகார்தாரரும் தெளிவாக சம்பவத்தை பொறுத்து எடுத்துக்கூறினால் மட்டுமே சம்பவத்தின்போது யார் குற்றம் இழைத்தார்கள் என்பது பொறுத்து கண்டறிய இயலும். மேலும் அரசு தரப்பில் வேறு எந்த தனிப்பட்ட சாட்சிகளையும் விசாரித்து எதிரிகள் தான் சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள் என்பதைப் பொறுத்து தெளிவாக எடுத்துக்கூறி சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் இந்த வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட எந்த சாட்சியும் எதிரிகள் தான் சம்பவத்தில் தொடர்புடைய நபர் என்றும், அவர்கள் தான் அ.சா.1ன் கடையின் கண்ணாடியை உடைத்த நபர்கள் என்றும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்து எடுத்துக்காட்டவில்லை. மேலும் கைப்பற்றுதல் மகஜரில் கண்ட சாட்சிகளையோ, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் கண்ட சாட்சிகள் பிறழ்சாட்சிகளாகியுள்ள நிலையிலும், மேலும் அ.சா.1 தனது சாட்சியத்தில் கல்லை யார் கடைமீது வீசி ஏறிந்தார்கள் என்ற விபரம் தனக்கு தெரியவில்லை என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில் கல் மற்றும் கண்ணாடியை கைப்பற்றியதை பொறுத்து இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகிறது.

4.12)மேலும் கல் மற்றும் கண்ணாடி தான் இந்த சம்பவத்தில் தொடர்புடைய ஆயுதம் என்பதை அரசு தரப்பில் எடுத்துக்காட்டவில்லை. மேலும் இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட எந்த சாட்சியும் எதிரியை அடையாளம் காட்டவில்லை. அ.சா.2

முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் சம்பவத்தை பொறுத்து தனக்கு தெரியாது என்று கூறியுள்ள நிலையில் காவல்துறை தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.7 விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து இந்த வழக்கை முடிவு காண இயலாது. ஆகவே எதிரிகள் தான் இந்த சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வர இயலாது.

4.13) மேலும் இந்தநீதிமன்றம் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 27–ஐ பரிசீலனை செய்யும்போது **State of Karnataka Vs David Razario (2002) 7 SCC 728, 2002 SCC (Crl) 1852, 2002 Crl.J 4127** என்ற முன்தீர்ப்பில்,

The object of the provision, i.e Section 27 was to provide for the admission of evidence which but for the existence of the section could not in consequences of the preceding sections, be admitted in evidence, it would appear that under section 27 as it stands in order to render the evidence leading to discovery of any fact admissible, the information must come from any accused in custody of the police என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட முன்தீர்ப்பை பரிசீலனை செய்யும்போது பிரிவு 27–ன் அடிப்படையில் எதிரிகளிடமிருந்து ஒரு சங்கதியைப் பெற்று, அதன் மூலம் ஒரு பொருளை கண்டறிந்தால் அந்த சாட்சியம் ஏற்றுக்கொள்ளலாம் என்று கண்டுள்ளது.

4.14) மேற்கண்ட முன்தீர்ப்பை பரிசீலனை செய்யும்போது எதிரியிடமிருந்து சங்கதிகளைப் பெற்று கல் மற்றும் கண்ணாடியை கைப்பற்றியதாக அரசு தரப்பில் கூறியுள்ள நிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கண்ட சாட்சி பிறழ்சாட்சியாகியுள்ள நிலையில் அரசு தரப்பில் கைப்பற்றப்பட்ட கல் மற்றும் கண்ணாடியை வைத்து மட்டும் எதிரிகள் குற்றம் இழைத்துவிட்டார்கள் என்று இந்த நீதிமன்றம் முடிவிற்கு வர இயலாது. ஆகவே அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அரசு தரப்புக்கு உதவியாக இல்லாத

காரணத்தினாலும், எதிரிகள் மீது உள்ள குற்றச்சாட்டை நிரூபிக்கும் அளவுக்கு இல்லாத காரணத்தினாலும் எதிரிகள் தான் சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பதைப் பொறுத்து அரசு தரப்பில் தெளிவாக விளக்காத நிலையிலும், அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட தமிழ்நாடு சொத்துக்கள் சேதம் அல்லது இழப்பு ஏற்படுத்துதல் தடுப்பு சட்டம் பிரிவு 3(1), இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(ii)ன் படியான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றும், அரசு தரப்பு வழக்கின் மீது ஏற்படும் சந்தேக சூழ்நிலைகளை அரசு தரப்பில் தெளிவாக எடுத்துக்காட்டி நிரூபணம் செய்யாத நிலையிலும், இந்த வழக்கில் எழும் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 235(1)ன் கீழ் விடுதலை செய்வது நீதியின் பால் உகந்தது எனக்கருதி இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

**முடிவாக,** இந்த வழக்கில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள், சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகள் தமிழ்நாடு சொத்துக்கள் சேதம் அல்லது இழப்பு ஏற்படுத்துதல் தடுப்பு சட்டம் பிரிவு 3(1), இ.த.ச. பிரிவுகள் 294(பி), 506(ii)ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து எதிரிகளை விடுதலை செய்து கு.வி.மு.ச. பிரிவு 235(1) ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் PR No.7/2025 என்ற எண்ணில் ஒப்படைக்கப்பட்ட சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஆன கல் மற்றும் கண்ணாடியை மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 18ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

M MANIKANDAN

Digitally signed by M MANIKANDAN
Date: 2026.03.18 18:25:25 +0530

உதவி அமர்வு நீதிபதி,
பொள்ளாச்சி

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u> :–**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.லாலு |
| அ.சா.2 | திரு.ஆண்டு ஜோசப் |
| அ.சா.3 | திரு.ஜேசுநாதன் |
| அ.சா.4 | திரு.ஜீயா உல் ஹக் |
| அ.சா.5 | திரு.சண்முகம் |
| அ.சா.6 | திரு.ரமேஷ் |
| அ.சா.7 | திரு.அசோக்குமார் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>** :–

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.1 | புகார் |
| அ.த.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.3 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.5 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.த.சா.ஆ.6 | படிவம் 91 |

**<u>அரசு தரப்பு சான்றுபொருட்கள்</u>** :–

சா.பொ.1 – கல்

சா.பொ.2 – கண்ணாடி

M MANIKANDAN

Digitally signed by M MANIKANDAN
Date: 2026.03.18 18:25:30 +0530

உதவி அமர்வு நீதிபதி,
பொள்ளாச்சி

**<u>குறிப்பு</u>**

1. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் நீதிமன்ற பிணையில் இருந்தனர்.
2.இவ்வழக்கில் சாட்சிகள் யாரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3.வழக்கின் முடிவு குறித்து சம்பந்தப்பட்ட காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.